## வாக்குமூலம்

## முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 106/2018 |
| வழக்கு சாட்சி | : | PW 7 |
| நாள் | : | 25.10.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாய் கிஸ்டோபர் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | செல்வகுமார் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

4ம் எதிரி இறப்பு. 2, 7ம் எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தற்போது திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2016ம் வருடம அக்டோபர் மாதம் தேதி சரியாக தெரியவில்லை அன்று திருத்தணி வட்டாட்சியர் அவர்கள் ஒரு வழக்கின் ஒரு சாட்சியாக இருக்க சொல்ல வாய்மொழியாக உத்தரவாக கூறினார். அதே போல் திருத்தணி காவல் நிலைய ஆய்வாளரும் வாய்மொழியாக அழைத்தன் பேரில் பொதட்டுர்பேட் கூட்டு சாலையில் நான் சென்றேன். அங்கு காவல் ஆய்வாளர் இருந்தார். ஆறுமுகம் என்ற நபர் இறந்த கொலை வழக்கில் நான்கு நபரை பிடித்து வைத்திருப்பதாகவும், அவரிடமிருந்து கொலைக்கு பயன்படுத்திய பொருட்களை கைப்பற்றியிருப்பதாகவும் அழைத்தார். எதிரிகள் ராஜேஷ் என்கிற ராஜேஷ்குமார், ஜாகீர் என்கிற ஜாகீர் உஷைன், பிரேம் என்கிற பிரேம்குமார் மற்றும் சின்னசாமி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.10 முதல் அ.த.சா.ஆ.13 வரை ஆகும்.** என்னுடன் கிராம உதவியாளர் குமார் என்பவரும், அதில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். அவர் தற்போது உயிருடன் இல்லை. அப்போது போலிசார் என் எதிரே செல்போன், இரு

சக்கர வண்டி, துணிகளை காண்பித்தார். மற்ற பொருட்கள் தற்போது ஞாபகமில்லை. இவைகளை போலிசார் கைப்பிற்றினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்பட்டு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.14 முதல் அ.த.சா.ஆ.20 ஆகும்.** என்னுடன் கிராம உதவியாளர் குமார் என்பவரும், அதில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். அவர் தற்போது உயிருடன் இல்லை. அதன் பிறகு 1 மணி நேரம் கழித்து காவல் நிலையத்தில் சென்று தட்டச்சு செய்த ஆவணத்தில் கையெழுத்து செய்தேன். அது என்ன ஆவணம் என்பது எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 13.10.2016ம் தேதி காலை 4.45 மணிக்கு நானும், உதவியாளர் குமார் அலுவலகத்தில் இருந்தோம் என்றும், அப்போது திருத்தணி காவல் ஆய்வாளர் அழைத்தன் பேரில் குற்ற எண்.640/2016-ல் கொலை வழக்கில் எதிரிகள் ராஜேஷ் என்கிற ராஜேஷ் குமார், ஜாகீர் என்கிற ஜாகீர் உஷைன், பிரேம் என்கிற பிரேம்குமார் மற்றும் சின்னசாமி ஆகியோரை பொதட்டூர் பேட் கூட்டு சாலையில் கைது செய்து இருப்பதாகவும், அதற்கு தங்களை சாட்சியாக இருக்கும்படி கூறினார் என்றும், நாங்களும் சம்மத்தித்தோம் என்றும், அந்த நான்கு பேரும், யாரும் எந்த ஒரு துன்புறுத்தலும் இன்றி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆ.தி.மு.க சேர்ந்த ஆப்பில் ஆறுமுகம் என்பவரை தொழில் ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், முன் விரோதம் காரணமாகவும், அவரை திட்டம் தீட்டி கொலை செய்ததாகவும், ராஜேஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை, ஜாகீர் என்கிற ஜாகீர் உஷைன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை, பிரேம் என்கிற பிரேம்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் காலை 10.30 மணி முதல் 11.00 மணி வரை, சின்னசாமி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம்

காலை 12.15 மணி முதல் 13.15 மணி வரை பதிவு செய்தார்கள் என்றும், ராஜேஷ்யிடமிருந்து மோட்டார் சைகல் TN 20 CD 4850, Samsung Cell phone, பதிவு எண் இல்லாத மஞ்சள் நிற ஆட்டோ ஒன்று, 200 gram மிளகாய் தூள் பாலிதீன் கவருடன், ஜாகீர் உஷைன்யிடருந்து ரத்த கறை படியாக இரும்பு ராடு ஒன்று, ரத்த கறை படியாக வெள்ளை கோடு போட்ட லோயர் ஒன்று, கப்பல் படம் போட் நெக் பணியன் ஒன்று, பிரேம்யிடருந்து வெள்ளை கட்டம் போட்ட லோயர் ஒன்று, சிமென் கலர் அரை பணியன் ஒன்று, சின்னசாமியிடருந்து செல்போன் ஒன்று, கைப்பற்றினார்கள் என்றும், அந்த மகஜரில் நானும், உதவியாளர் குமாரும் கையெழுத்து செய்தோம் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2025.10.25 14:24:36 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.